# மாநில தலைவருக்கான பாராட்டு விழா, திருப்பத்தூர்

**05.02.2020**



நேற்று (05-02-2020) திருப்பத்தூரில் நடந்த மாநில தலைவருக்கான பாராட்டு விழா வேலூர் மாவட்ட சங்கம் மற்றும் திருப்பத்தூர் நகரத்து வைசியர் சங்கங்கள் இணைந்து சிறப்பாக நடத்தினர்.

நமது ஆயிரவைசிய குலக்கொழுந்துகள் நடனத்தாலேயே ஆயிரவைசியர்களை வரவேற்றனர்.

நமது சமுதாய சிறுமிகளின் பரதநாட்டியம் அனைவரையும் வெகுவாக கவர்ந்தது.

மாநில செயலாளர் டாக்டர் M.ஜெயராமன் அவர்கள் தனது உரையில் மாநில சங்கம் செயல்படுத்தி வரும் IAS கல்வித்திட்டத்தின் சிறப்பை எடுத்துரைத்தார்.

மாநில தலைவர் டாக்டர் AS.கணேசன் அவர்கள் தனது ஏற்புரையில், திருக்குறள் செம்மல் மணிமொழியனாரின் பெருமையை தான் அறிந்து கொண்ட தருணங்களை சிலாகித்து

பேசினார். IAS கல்வி திட்டத்தை தொடர்ந்து மாநில சங்கம் செயல்படுத்தும் என உறுதிபட தெரிவித்தார்.

மாநில சங்கத்தின் ஆயிரவைசிய கல்வி அறக்கட்டளைக்கு ஆயிரவைசியர்களின் பங்களிப்பு இருக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

முத்தாய்ப்பாக ஆயிரவைசிய சங்கங்களில் இணைந்து சேவை செய்திட, ஆயிரவைசிய இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்தார். தமிழ்நாடு ஆயிரவைசிய சங்கத்தின் புதிய எழுச்சிக்கு காரணமாக தமது சக நிர்வாகிகளை சுட்டியபோது அரங்கம் அதிர்ந்தது. மாநில சங்கம் ஆயிரவைசியர்களை அரவணைத்து போகும் பாங்கு அனைவரையும் கவர்ந்தது.

தலைவரின் அழைப்பை ஏற்று ஆயிரவைசிய இளைஞர்கள் பெருமளவில் சங்கப்பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு சமுதாய சேவையாற்றிட வாருங்கள்.

இவ்விழாவினை வெற்றிகரமாக நடத்திய வேலூர் மாவட்ட ஆயிரவைசிய சங்கம் மற்றும் திருப்பத்தூர் நகரத்து வைசியர்கள் சங்கத்திற்கும் மனமார்ந்த பாராட்டுக்களும், நன்றிகளும்.

**இங்ஙனம்,**

**தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்கம்.**

~~~~~*****~~~~~
~~~~~